பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆடி 15 செவ்வாய்க்கிழமை (30-07-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 164

# யுத்த செலவு காரணமாகவே மானியம், நிவாரணம் வெட்டு

## பொருளியல் நிபுணர்கள் கருத்து

கொழும்பு, ஜூலை 30

பாதுகாப்புக்கு ஒதுக்கப்படும் நிதிக்கு அதிகமாகப் போருக்குச் செலவாகின்றது. அதனால் நிவாரணங்கள், மானியங்களை நிறுத்தவேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்படுகிறது. அதன் முதற் கட்டமே பாண் விலை உயர்வு.

பொருளியல் விமர்சகர்கள் இவ்வாறு தமது ஆய்வு விமர்சனத்தில் தெரிவித்திருக்கின்றனர்.

இந்த நிலை தொடர்ந்தால், பொருளாதாரக் கொள்கையை மாற்றாவிட்டால் நாட்டில் பொருளாதாரப் பேரழிவு நிகழும் என்றும் அவர்கள் எச்சரித்திருக்கின்றனர்.

பி. பி. ஸியின் சிங்களச் சேவை நேற்றிரவு இலங்கையின் பொருளியல் நிலை குறித்து ஒரு கண்ணோட்டத்தை ஒலிபரப்பியது.

அதன் விவரம் வருமாறு-:

இலங்கையில் பாணின் விலை மீண்டும் உயர்ந்துள்ளது. பாண் விலை போலவே வாழ்க்கைச் செலவும் உயர்ந்துள்ளது.

இவை யாவற்றுக்கும் காரணம் உக்கிரம் அடைந்து வரும் உள்நாட்டு போரேயாகும். இதனால் அரசாங்கத்தின் வருமானமும், தனியார் துறையினரின் உற்பத்தியும் வீழ்ச்சி கண்டுள்ளன. அரசால் வழங்கப்படும் மானியங்களையும், இலவச நிவாரணங்களையும் வெட்ட வேண்டியுள்ளது.

இந்நடவடிக்கையின் முதல் கட்டமே பாண் விலை அதிகாரிப்பு என விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

(4 ஆம் பக்கம் பார்க்க

## பொதுமக்களின் உதவி கோரப்படுகிறது

கொழும்பு, ஜூலை 30

தெஹிவளையில் இடம்பெற்ற ரயில் குண்டு வெடிப்புச் சந்தேக நபர்களைக் கைது செய்ய பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடி உள்ளனர்

சம்பவதினம் குண்டு வெடிப்புக்கு உள்ளான ரயிலில் பய

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சிப் பகுதியை விரைவில் பிடிப்போம்!

## ஜனாதிபதி சூளுரை

கொழும்பு, ஜூலை 30

''கிளிநொச்சியை விரைவில் பிடிப்போம்.''

அத்தனகலைத் தொகுதி அரச அதிகாரிகள் மத்தியில் உரை நிகழ்த்துகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கண்டவாறு சூளுரைத்தார்.

கடந்த சனிக்கிழமை நித்தம்புவ சியன் கல்விக் கல்லூரியில் இந்த நிகழ்ச்சி இடம் பெற்றது.

''வடக்கில் தற்போது நடைபெற்று வரும் ''உண்மை வெற்றி'' இராணுவ நடவடிக்கையில் நாம் பெருவெற்றி பெறுவோம். அதன் மூலம் விடுதலைப் புலிகள் வசம் இருக்கும் பெரும்பாலான பிரதேசங்களைக் கைப்பற்றி எமது அரச நிர்வாக இயந்திரத்தை அங்கும் விரைவில் செயற்படுத்துவோம்.'' என்றும் ஜனாதிபதி கூறினார்.

ஜனாதிபதி மேலும் கூறியதாவது:-

நாடு இன்று பெரும் நெருக்கடியில் இருக்கின்றது. விடுதலைப் புலிகளின் கோழைத்தனமான நடவடிக்கைகளின் விளைவுகளை நாடு எதிர்கொண்டிருக்கின்றது. இவ்வாறான நிலையில் நாட்டு மக்கள் புத்திசாதுரியத்துடனும், பொறுமையுடனும் நடந்து கொள்ளவேண்டும்.

பொதுமக்கள் மீது தாக்குதல்களைக் கட்டவிழ்த்து விட்டு மீண்டும் ஒரு கறுப்பு ஜூலையை உருவாக்குவதே புலிகளின் தந்திரோபாயமாகும்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தெரிவுக்குழு மூலம் தீர்வு வரும் என்ற நம்பிக்கை எவருக்கும் கிடையாது

## கொழும்பு தமிழ் நாளிதழ் ஆசிரிய தலையங்கம்

கொழும்பு, ஜூலை 30

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழு பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் கொண்டு வரும் என்பதில் இருந்த நம்பிக்கையை அனைவருமே இழந்துவிட்டனர். இந்த நிலையில் பிரச்சினை தொடங்கிய இடத்திலேயே வந்து நிற்கிறது போலத் தெரிகிறது.

கொழும்பு தமிழ் தினசரி ஒன்று தனது ஆசிரிய தலையங்கத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அந்த ஆசிரிய தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

அடுத்த வருடத்துடன் யுத்தத்துக்கு முடிவு காணப்பட்டு இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட்டு விடும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்[illegible] காலக்கெடு விதித்துள்ளார்.

ஜனாதிபதி காலக்கெடுக்களை விதிப்பது இது முதல் தடவை அல்ல. இதற்கு முன்னர் அவர் விதித்த பல்வேறு காலக்கெடுக்கள் ஏற்கனவே காலாவதியாகிப் போய் உள்ளன.

ஆனால் இப்போது பிரச்சினை அதுவல்ல. இந்தக் காலக்கெடுக்கள் அனைத்தும் [illegible]

(4 ஆம் பக்கம் பார்க்க )

# பொலீஸ் நிலையம் மீது அம்பாறையில் தாக்குதல்

கொழும்பு, ஜூலை 30

அம்பாறை மாவட்டம் உகணப் பகுதியில்உள்ள கலப்பதிவெல பொலீஸ் நிலையம் நேற்று அதிகாலை வேளை விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானதாகப் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்தது.

சுமார் இருமணி நேரம் நீடித்த சண்டையின் பின்னர் பொலீஸ் நிலையம் மீதான தாக்குதல் முயற்சி முடியடிக்கப் பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

இந்தச் சண்டையில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் காயமுற்றார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

# கிளிநொச்சியிலிருந்து மக்கள் இடம்பெயர்வு

## செஞ்சிலுவை அதிகாரி தகவல்

கொழும்பு, ஜூலை 30

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கை காரணமாக பல்லாயிரக் கணக்கான மக்கள் கிளிநொச்சியிலிருந்து இடம் பெயர்ந்து செல்கின்றனர் என செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுப் பிரதிநிதியான மார்க்கோ [illegible]வெல் தெரிவித்திருக்கின்றார்.

எத்தனை ஆயிரம் பேர் இடம்பெயர்ந்து செல்கின்றனர் என்பதை இப்போது குறிப்பாகச் சொல்ல முடியாது.

ஆனால் மக்கள் ஓர் ஆண்டுக்குள் மூன்றாவது முறையாக இடம்பெயர நேரிட்டுள்ளது. என என்னால் கூற முடியும்.

அவர்களில் பலருக்கு எங்கே போகிறோம் எனத் தெரியவில்லை. பலர் காடுகளுக்குள் சென்றிருக்கலாம். எந்தப் பகுதி பாதுகாப்பானது என்பதும் அவர்களுக்குத் தெரியாது. அவர்களுக்கு உரிய உணவும் குடிதண்ணீரும் கிடைக்கிறதா என்பதும் தெரியவில்லை. மக்கள் முக்கிய உடைமைகளை மாத்திரம் கையில் எடுத்துச் சென்றுள்ளனர் என நான் நினைக்கிறேன். மக்களுக்கு உணவைப்பெற எந்த ஒரு வழியுமில்லை. இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

(உ)

# பரந்தனை நோக்கி புலிகள் ஷெல் தாக்குதல்

ஆனையிறவில் இருந்து முன்னேறி பரந்தன் சந்திப்பகுதி வரை நிலைகொண்டிருக்கும் ஸ்ரீலங்காப் படைகள் அங்கு தமது நிலைகளை பலப்படுத்தி வருவதாகவும்—

அப்பகுதியை நோக்கி விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதல்களை நடத்தியுள்ள போதும் படையினருக்கு எவ்வித இழப்புகளும் ஏற்படவில்லை என்றும்—

நடவடிக்கைத் தலைமையகச் செய்திகளை மேற்கோள் காட்டி இலங்கை வானொலி இவ்வாறு அறிவித்தது.

பாதுகாப்புப் படையினர் பீரங்கிகள் மற்றும் விமானப் படையின் உதவியுடன் புலிகளின் நிலைகள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

கிளிநொச்சியைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு புலிகள் மூர்க்கத்தனமாகப் போராடி வருவதாகவும் கூறப்பட்டது.

(உ-3)

## 4 பக்கங்களில் இன்று "உதயன்"

வலிகாமம் மேற்கு மற்றும் வலிகாமம் தெற்குப் பகுதியைச் சேர்ந்தோர் கே.கே எஸ். வீதி வழியாக வழமைபோல் யாழ். நகருக்கு வருவதில் நேற்றுப் பகல் ஏற்பட்ட தடங்கல் நிலை காரணமாக, உதயன் பணிமனைக்கு ஊழியர்களின் வரவும் பெரிதும் பாதிக்கப்பட்டது.

இதனால் இன்று உதயன் நான்கு பக்கங்களில் வெளிவருகின்றான். அதற்காக வாசகர்கள் மன்னிப்பார்களாக! நாளைமுதல் உதயன் வழமைபோல் வெளிவருவான் என நம்புகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இறந்த பின் எங்கு செல்கிறோம்? ஓர் ஆய்வு நூல். ஆக்கியோன், அ. குமரகுரு. தொடர்பு:- ''மணியம் ஸ்ரோர்ஸ்'' கண்டி றோட் சாவகச்சேரி. (சி/2686)

நல்ல நிலையில் உள்ள 'பஜாஜ்' ஸ்கூட்டர், லேடிஸ் சைக்கிள் (China) விற்பனைக்குண்டு. K. மோகன் 'மங்களபதி' 41/5, அரசவீதி (பண்டாரக்குளம் பிள்ளையார் கோயில் வீதி) நல்லூர். (42031)

### தவறிவிட்டது

மேனகா துரைராஜா (அன்னபவனம், கீரிமலை, காங்கேசன் துறை) ஆகிய எனது 757220130V இலக்கமுடைய அடையாள அட்டை 28 – 07 – 96 அன்று இராசாவின் தோட்டத்துக்கும் பரமேஸ்வரா சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் த. குலசிங்கம் 28, மடம் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (42032)

### புலமைப் பரிசில் 95

14-7-96 அரசாங்கத்தால் நடத்தப்பட்ட ஆண்டு 5 புலமைப் பரிசில் விசேட பரீட்சை வினாத்தாள்களை எல்லா பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். வெளியீடு: Bond, யாழ்ப்பாணம். (41990)

### உதயம் வாடகைக்கு

பீங்கான் ரம்லர், தண்ணீர் ரம்லர், பந்திப்பாய், பிளாஸ்ரிக் பாய்கள், ஐஸ்கிறீம் கப்ஸ், குத்துவிளக்கு, கறி வாளிகள், சமையல் பாத்திரங்கள், கிடாரங்கள், சில்வர் றே இன்னும் பல வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம். உதயம் (வைற்கவுஸ் அருகில்) 172, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (41870)

### A/L பௌதிகவியல்

அனுபவம் பெற்ற ஆசிரியரினால் பௌதிகவியல், தூயகணிதம், பிரயோககணிதம் பயிற்சிகளோடு சிறப்பாகக் கற்பிக்கப்படும். (தனிப்பட்ட முறையிலும்) R.பாலசுப்பிரமணியம் B. Sc (Cey) Dip - in - Ed 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (42012)

### புதிய தபாற் பெட்டிகள்

உரும்பராய் ஜூலை 30

உரும்பராய் பகுதியில் முன்பு தபாற் பெட்டிகள் இருந்த இடங்களில் புதிய தபாற் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.

இதனால் கடிதங்களைத் தபாலில் சேர்ப்பதில் மக்கள் அனுபவித்த துன்பங்கள் நீங்கியுள்ளன. (இ-154)

## A/L 98
## கலை வர்த்தகம்

ஆரம்பம்: **04 – 08 – 96**
8-00 மணி

குறிப்பு:
முன்கூட்டியே அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்

நிர்வாகி: S. அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி யாழ்.
(42014)

## JAFFNA COLLEGE, VADDUKKODDAI

Wanted Teachers to teach Botany and Agriculture. Retired Teachers too cam apply:
Please apply before 5th August

(42029) **Principal.**

## காணி விற்பனைக்கு

யா/ உடுவில் மருதனார்மடம் மானிப்பாய் வீதிக்கு அண்மையில் ஆலயடி சந்திக்கு கிழக்குப்பக்கமாக சுமார் 50 மீற்றர் தூரத்தில் காணியுண்டு.

6 நிலப்பரப்பு. தோட்டம் செய்த பூமி. இரண்டு பக்கமும் ஒழுங்கையுண்டு. விலை மற்றும் விவரங்களுக்கு விளம்பரதாரரோடு தொடர்புகொள்ளலாம்.

வீடுகட்டக் கூடியது பங்குக் கிணறும் உள்ளது.

விலாசம்:
கா. சி. நடராசா
''மலாயாஸ்தான்''
கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு.
(42028)

## யாழ். மத்திய கல்லூரியின் 180 ஆவது நிறைவு விழா

யாழ். மத்திய கல்லூரி 01 - 08 - 1996 அன்று 180 ஆவது அகவையினை கொண்டாடுகின்றது.

இடம்: தம்பர் ஞாபகார்த்த மண்டபம்

காலம்: **01–08–1996**

நேரம்: முற்பகல் 10.00 மணி (பழையநேரம்)

பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், ஆதரவாளர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இ. இராஜாராம் — தலைவர்.
செ. திருநாவுக்கரசு — உப செயலாளர்.

யாழ். மத்திய கல்லூரி
பழைய மாணவர் சங்கம்.
(சி/2683)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு; **23 – 10 – 1959**
உதிர்வு: **30 – 06 – 1996**

### அமரர் நவரத்தினம் புஸ்பராசா
(வர்த்தகர், மாம்பழம்சந்தி, அரியாலை)

தரணியில் புஸ்பமாக மலர்ந்து, சகலரின் நெஞ்சினிலே பாச மிகு மைந்தனாக இருந்து, இன்று எம்மை ஆறாத்துயரில் விட்டுச் சென்ற மைந்தனே!! தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, தாய், தந்தையர், சகோதர, சகோதரிகள், சிறிய தந்தையர், சிறியதாய்மார் மாமியர், மைத்துனர், மைத்துனிமார், உற்றார், உறவினர், நண்பர்கள்.

எமது மகனின் அகால மரணத்தைக் கேள்வியுற்று, நேரடியாகவும், கடித மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், பலவழிகளிலும் உதவிய அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பு. இராசலட்சுமி (மனைவி)
திரு/ திருமதி நவரத்தினம் (பெற்றோர்)

185 கண்டி வீதி,
அரியாலை.
(41988)

சாவகச்சேரி
அருள்மிகு
## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் மகோற்சவ விழா அழைப்பு

அன்புடையீர்!

கொடியேற்றம் **4-8-96** ஞாயிறு முற்பகல் 10 மணி
வேட்டைத் திருவிழா: **10-8-96** சனி பி பகல் 2மணி
சித்திரத் தேர்: **12-8-96** திங்கள் மு.பகல் 10 மணி
தீர்த்தத் திருவிழா: **13-8-96** செவ்வாய் மு. பகல் 9 மணி
பூங்காவனம்: **14-8-96** புதன் பி. பகல் 3 மணி

மேற்குறித்த நிகழ்ச்சிகள் யாவும் பழைய நேரப்படியே நடைபெறும்.

விரதம் அனுட்டிப்போர் கொடியேற்றத்தன்று நேரத்துக்கே பெயர்களைப் பதிவுசெய்து சங்கற்பம் செய்து கொள்ளவும்.

தூர இருந்து வரும் அடியார்கள் வசதி கருதி திருக்கதவு பகல்பூராவும் திறந்து இருக்கும்.

அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!

இங்ஙனம்:
ப. மகாகணபதி சர்மா
(தர்மகர்த்தா)
(41972)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

### அமரர் துரையப்பா கிருஷ்ணசாமி
(லஷ்மி பவான்)

திதி: **31 - 7 - 1996**

ஆலமரமாய் வியாபித்து எமக்கு நிழல்
தந்தீரய்யா
விழுதுகள் நாம் உம் நிழலை நிரந்தரமாய்
நம்பினோமய்யா
நிழலை இழந்து அனலில் நாம் இன்று
தவிக்கிறோமய்யா
விழிகளில் பெருகும் கண்ணீர் என்றுதான்
தணியுமையா.

எமது குடும்பத்தின் கலங்கரை விளக்காயும், பருத்தி நகரின் வணிக முன்னோடியாகவும் திகழ்ந்து, இல்லையென வந்தோருக்கும் வள்ளலென வாரி வழங்கி, எம்முயிருடன் கலந்து வாழ்ந்து 1 – 7 – 96 அன்று எம்மை மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனோடு ஐக்கியமாகி விட்ட எம் இனிய தந்தையாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 31 - 7 – 96 (புதன்கிழமை) எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம், எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் இக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அன்போடு அழைக்கிறோம்.


மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கி. ரவீந்திரன். (குட்டி),
இரண்டாம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை.
(42033)

## 13-ம் ஆண்டு நினைவலைகள்



S. சரவணமுத்து
(B. A. London)
தோற்றம்: **19–04–1901**
மறைவு: **24–07–1983**



S. கலாபரமேஸ்வரன்
(M. A. Ceylon)
தோற்றம்: **02–08–1944**
மறைவு: **24–07–1983**

திதி: **30–07–1996**

தங்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;
— குடும்பத்தினர்.

''இலக்குமி பதி''
பலாலி வீதி, திருநெல்வேலி.
(42025)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## பாகுபாடு பாதகமானது

இராணுவ நடவடிக்கைகள் மற்றும் வன்செயல்கள் காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்வதனை அனுமதிப்பதில் பாகுபாடு காட்டப்பட்டிருக்கிறது.

தமிழ், முஸ்லிம் மக்கள் மீளக்குடியமர்வதற்கு அனுமதி மறுக்கப்படுவதாகவும், சிங்கள மக்கள் குடியேறுவதற்கு ஊக்கமளிக்கப்படுவதாகவும் திருகோணமலை மாவட்ட எம். பி திரு அ. தங்கத்துரை குற்றஞ்சாட்டி உள்ளார்.

பாதுகாப்புக் காரணங்களைக் காட்டியே தமிழ், முஸ்லிம் மக்கள் இவ்வாறு புறக்கணிக்கப்படுவதாக அவர் தெரிவித்திருக்கிறார்.

இந்தப் பாகுபாட்டுக்கு யார் பொறுப்பாக இருப்பினும், இத்தகைய நடவடிக்கைகளே இன உறவுகளில் பெரும் விரிசல்களைக் கொண்டு வந்து பூசல்களுக்கு வழி செய்பவை.

கிழக்கு மாகாணத்தில், திட்டமிட்ட அரச ஆதரவுடன் நடைபெறும், சிங்களக் குடியேற்றம் நீண்ட காலமாகவே பெரும் சர்ச்சைக்குரிய விடயமாக இருந்து வருகிறது.

அங்கு வாழும் தமிழ், முஸ்லிம் மக்களின் விகிதாசாரத்தைக் குறைத்து, சிங்கள மக்களின் விகிதாசாரத்தை அதிகரிக்கும் நோக்குடன் அரச ஆதரவுடன் பெரும்பான்மை மக்களைக் குடியேற்றும் செயல் திட்டங்கள் குறித்து பல வருடங்களாகத் தொடர் ஆட்சேபம் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய குடியேற்றங்களும், அதற்கான ஆட்சேபங்களும் முடிவின்றித் தொடர்வது இன உறவில் உண்டாகியுள்ள பெரும் விரிசலுக்கான முக்கிய காரணங்களில் ஒன்றாகும் என்பதை மறந்துவிடலாகாது.

தமிழ், முஸ்லிம் மக்கள் தாம் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த இடங்களுக்கு, தமது சொந்த வீடுகளுக்கு திரும்பிச் சென்று குடியமர அனுமதி மறுப்பது—

அதற்குப் பாதுகாப்புக் காரணங்களைக் கூறுவது—

அந்த மக்களை சந்தேகப் பிராணிகளாகப் பார்க்கும் மனப்போக்கையே ஐயத்துக்கு இடமின்றிக் காட்டுகிறது. இது அவர்களை அந்நியப் படுத்தவே உதவும்.

தமிழ் மக்களும் இந்த நாட்டின் பிரசைகள், ஏனையோருக்குள்ள வாழ்வுரிமைகள் அவர்களுக்கும் உண்டு. இன சமத்துவம் உண்டு என்ற நிலையை அவர்கள் மனங்களில் உண்டாக்கும் விதத்தில் அலுவல்கள் நடக்க வேண்டும்.

அவ்வாறன்றி, அதற்கு எதிர்மறையாகச் செயற்படுவது, செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது—

தமிழர்களை இரண்டாந்தரப் பிரசைகளாக்கி அடக்கி ஆள்வதற்கான ஏற்பாடுகளாகவே கருதப்படும்.

இத்தகைய நடவடிக்கை இனப்பூசலைப் பெரிதாக்குமே அன்றி — தீர்வுகாண, சமாதானத்துக்கான முயற்சிகளுக்குக் குந்தகம் விளைவிக்குமே அன்றி— எந்த வகையிலும் ஆக்கபூர்வமாக அமையாது.

அரச உயர்பீடத்தில் உள்ளவர்கள் மட்டுமன்றி இடை நடுவில் உள்ள அதிகாரிகளும் இதனை உணர்ந்து செயற்பட வேண்டும்.

# சட்டவிரோதமாக தங்கியுள்ளோரை வெளியேற்ற இந்தியா நடவடிக்கை

புதுடில்லி, ஜூலை 30

இந்திய மண்ணிலிருந்து சட்ட விரோதக் குடியேற்றக் காரர்களை வெளியேற்றுவதற்கான மாபெரும் திட்டம் ஒன்றை இந்திய அரசாங்கம் அமுல் செய்யவிருக்கிறது

மத்திய அரசாங்கம் சகல மாநிலங்களுக்கும் அனுப்பி வைத்துள்ள விசேட சுற்றறிக்கை ஒன்றில் வீசா இல்லாமலும் காலாவதியான வீசாவுடனும் தங்கியிருக்கும் வெளிநாட்டவரை இனம் கண்டு அவர்களை நாடுகடத்திவிடுமாறு பணித்துள்ளது.

உள்துறை அமைச்சர் இந்திரஜித் குப்தா கடந்தவார இறுதியில் லோக் சபாவில் இதனை அறிவித்தார்.

அரசாங்கத்தின் இத்தீர்மானத்தினால் பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், மியன்மார் ஆகிய நாடுகளிலிருந்து இந்தியாவுக்குள் பிரவேசித்த சட்டவிரோத குடியேற்றக் காரர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்படவிருக்கின்றது.

வீசா காலாவதியானபின்னரும் தங்கியிருப்பவர்களும் சட்டவிரோதமாக அங்கு சென்றவர்களுமான பல நூற்றுக்கணக்கான இலங்கைத் தமிழர்களும் இந்தியாவிருந்து திரும்ப நேரிடும் என்று உள்துறை அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## உலக அரங்கில்

230 பேரைப் பலி கொண்ட:

## விமான விபத்துக்கு குண்டு வெடிப்புக் காரணம்

அட்லாண்டிக் சமுத்திரத்தில் நியூயோர்க் நகருக்கு அருகே இடம்பெற்ற ரி.டபிள்யூ ஏ. விமான விபத்துக்கு குண்டுவெடிப்பே காரணம் என்று புலனாய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

விமானத்தின் முன்பக்கப் பொதி அறையில் குண்டு வைக்கப்பட்டிருந்தது என்றும் —

அது வெடித்ததில் விமானம் இரண்டாகப் பிழந்தது என்றும் கூறப்படுகிறது.

விமானிகளின் அறையும், முதலாம் வகுப்புப் பயணிகள் அறையும் துண்டிக்கப்பட்ட நிலையில் விமானத்தின் பின்பகுதி மட்டும் சில விநாடிகள் பறந்து சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ராடர் திரையில் இருபகுதிகள் காணப்பட்டதற்கு இதுவே காரணமாக இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

இந்த விமானவிபத்தில் 230 பேர் கொல்லப்பட்டது தெரிந்ததே. (இ-3)

ஏழு கொலைகளைச் செய்த

## குற்றவாளிக்கு 7 முறை மரணதண்டனைத் தீர்ப்பு

சிட்னி, ஜூலை 29

ஆஸ்திரேலிய நீதிமன்றம் ஒன்று கொலையாளி ஒருவருக்கு 7 தடவைகள் மரண தண்டனைத் தீர்ப்பு விதித்துள்ளது.

ஏழுபேரைக் கொன்றதாகச் சுமத்தப்பட்ட வெவ்வேறு வழக்குகளில் குற்றவாளியாகக் காணப்பட்ட ஐவன் மலெட் என்பவன் மீதான ஒவ்வொரு வழக்கும் தனித் தனியாக விசாரிக்கப்பட்டு அவன் குற்றவாளியாகக் காணப்படவே ஒவ்வொரு கொலைக்கும் தனித்தனியாக மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது. இரு ஆஸ்திரேலியர்கள், இரு பிரித்தானியர்கள், மூன்று ஜேர்மனியர்கள் என ஏழு பெண்களை சிட்னிக்குத் தெற்கில் அமைந்துள்ள காட்டிற்குக் கடத்திச் சென்று இவன் கொன்றதாகக் கூறப்படுகின்றது.

மற்றொரு பிரிட்டிஷ் உல்லாசப் பிரயாணியைக் கடத்த முற்பட்டபோது அந்தப் பயணி தப்பிச்சென்று செய்த முறைப்பாட்டை அடுத்தே இக்கொலைகள் தொடர்பான தகவல்கள் வெளியாகியதாகக் கூறப்படுகின்றது.

மூன்று நாள் விசாரணையின் பின்னர் ஜூரர்கள் ஐவன் மலெட்டை குற்றவாளியாகக் கண்டனர் (உ-10)

## புறூண்டி பேச்சுக்கள் ஆரம்பம்

கம்பாலா ஜூலை 30

மத்திய ஆபிரிக்க நாடான புறூண்டியில் மேலும் இரத்தக் களரியைத் தடுப்பதற்காக தன்ஸானியாவின் தலைநகரான கம்பாலாவில் உகண்டா — தன்ஸானியத் தலைவர்கள் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளனர்.

தன்ஸானியாவின் முன்னாள் ஜனாதிபதி ஜூலியஸ் நிரேரே இந்தச் சமாதான முயற்சியை ஆரம்பித்து வைத்தது தெரிந்ததே. (இ)

## பிலிப்பீன்ஸில் புயற்காற்று 39 பேர் பலி

பிலிப்பீன்ஸ் நாட்டைத் தாக்கிய குளோரியா என்ற புயற்காற்று 39 பேரைக் கொன்று கோடிக்கணக்கான ரூபா சொத்துக்களை நாசப்படுத்தி உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

ஒலிம்பிக் குண்டு வெடிப்பு

## வலதுசாரி அமெரிக்க குழு காரணமாக இருக்கலாம்

அட்லாண்டா ஒலிம்பிக் பூங்காவில் இடம்பெற்ற குண்டு வெடிப்பை வலதுசாரி அமெரிக்க மக்கள் படைக் குழுக்கள் நடத்தியிருக்கக் கூடும் என அமெரிக்க புலனாய்வுத்துறை சந்தேகிக்கிறது.

மூன்று குழாய்க் குண்டுகளை ஆராய்ந்த நிபுணர்கள் அந்தக் குண்டின் சிதறல்களில் இருந்து இரும்புத் துண்டுகளும், ஸ்குறூ ஆணிகளும் கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பூங்காவில் இருந்த மக்கள் எடுத்த வீடியோ படங்களையும் ஆராய்ந்து வருவதாக அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக துப்புத் துலக்க மேலும் சில ஆதாரங்கள் இப்போது கிடைத்திருப்பதாகவும் சொல்லப் படுகிறது. (இ-10-3)

## பாதுகாப்பு வட்டாரங்களில் சர்ச்சை கிளப்பிய பட்ஜட்

சமீபத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இந்திய ஐக்கிய முன்னணி அரசின் பட்ஜட்டில் இராணுவத்துக்கான நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டு சமூக மேம்பாட்டுத் திட்டத்துக்கு அதிக நிதி ஒதுக்கியது குறித்துபாதுகாப்பு அமைச்சுக்குள் தீவிரமான விவாதங்களை எழுப்பியுள்ளது.

கடந்த ஏழு ஆண்டுகளில் அண்டை நாடுகளான சீனா 26 சத வீதமும் பாகிஸ்தான் 50சத வீதமும் இராணுவத்துக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரித்துள்ளன.

இந்தச் சூழலில் இந்தியா இருந்துவந்தநிதி ஒதுக்கீட்டையும் குறைத்துவிட்டது சரிதானா என்று கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. ((இ-5)

## நல்லூர் உற்சவ கால ஏற்பாடுகள் வழமைபோல

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தின் போது வழமையான பணிகளை யாழ். மாநகர சபையும், தொண்டர் அமைப்புகளும் சேர்ந்து செய்யவுள்ளன.

திருவிழாக் கால ஏற்பாடுகள் குறித்து நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் இது குறித்து ஆராயப்பட்டது.

மாநகர ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் கலந்துரையாடலுக்குத் தலைமை வகித்தார்.

கடந்த காலங்களில் நல்லூர் உற்சவ காலத்தில் எவ்வாறு மாநகரசபையின் செயற்பாடுகள் அமைந்தனவோ அந்த அடிப்படையில் இம் முறையும் அவை இடம் பெறும் என்று ஆணையாளர் தெரிவித்தார்.

இந்துக் கழகம், தொண்டர் ஸ்தாபனங்களும் தமது வளங்களை இறை அர்ப்பணிப்பாகக் கொண்டு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

பின்வரும் ஒழுங்குகள் குறித்து நேற்றைய கலந்துரையாடலில் முடிவு செய்யப்பட்டது.

திருவிழாவை முன்னிட்டு கோவில் சுற்றாடலில் உள்ள வீதிகள் புனரமைக்கப்படும், மின்சார வசதிகளை மாநகரசபை மேற்கொள்ளும்.

சுகாதார சேவைகளைச் சிறந்த முறையில் செய்வதுடன், முதலுதவி சிகிச்சை நிலையங்களை தொண்டர் தாபனங்களின் மூலமும் மாநகர சபையின் மூலமும் அமைப்பது.

வழமையான வீதித்தடைகளை அமுல் படுத்துவது.

ஐஸ்கிறீம் விற்பனை நிலையங்களை கோயிலின் கிழக்குப் பகுதியில் மட்டுமன்றி மேற்குப் பகுதியிலும் அமைப்பது ஏனைய விற்பனை நிலையங்கள் முன்னர் போல் அமையும்.

வீதிக்கு நீர் தெளித்தல், வீதிக்கு மணல் பரவுதல், வீதிப் பந்தல் அமைத்தல், திருவிழாக்கால தொண்டர் சேவை, சுத்திகரிப்பு சேவை, குடி தண்ணீர் விநியோகம், துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்கள், திருவிழாச் சந்தை என்பன குறித்தும் ஆராயப்பட்டு முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

நல்லூர் வருடாந்த உற்சவம் எதிர்வரும் ஓகஸ்ட் 19 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது தேர்த் திருவிழா [illegible] 11 ஆம் திகதியும் [illegible] வனம் 13 ஆம் திகதியும் நடைபெறும். (அ-111-30)

## தெஹிவளைகுண்டுவெடிப்பு விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 30

தெஹிவளைக் குண்டு வெடிப்பு சம்பந்தமான மஜிஸ்திரேட் விசாரணை நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

கல்கிசை நீதிவான் சரத் ஆப்நா முன்னிலையில் 10 பேர் சாட்சியம் அளித்தனர்.

விசாரணை அடுத்த மாதம் முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

குண்டு வெடிப்புக்கு முன்பாக செயல் இழக்கச் செய்யப்பட்ட மூன்றாவது குண்டின் பகுதிகளை அடுத்த விசாரணையில் சமர்ப்பிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (இ-3)

## ஒத்திவைப்பு

வவுனியா நகரசபை மைதானத்தில் இன்றும், நாளையும் நடைபெறவிருக்க வடக்கு - கிழக்கு மாகாண மெய்வல்லுநர் போட்டிகள் தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக மாகாண கல்வி, கலாசார, விளையாட்டு அமைச்சுச் செயலாளர் திரு.சு. டிவகலால அறிவித்துள்ளார்.

அடுத்தமாதம் 3 ஆம், 4 ஆம் திகதிகளில் இப்போட்டிகள் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார். (உ-3)

## நிறைகள் பலவிதம்

அச்சுவேலி ஜூலை 30

அச்சுவேலிச் சந்தையில் சைக்கிளின் நடுஅச்சு (250 கிராம்) தேயிலை பைக்கெட் (50 கிராம்), இரும்புஆணிகள்' கற்துண்டுகள், மரக்கட்டைகள், போன்றபல்வேறு பொருட்கள் நிறுத்தல் அளவைப் படிகளாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

பண நெருக்கடி மிக்க இந்த வேளையில், பாவனைப் பொருட்களையாவது உரிய அளவு நிறையில் பெற்றுக் கொள்ள முடியவில்லையேஎன பாவனையாளர்கள் கூறுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-11)

## தொடர்பு கொள்ள கோரிக்கை

யாழ். கல்வித்திணைக்களத்தில் கட்டட, மற்றும் பாடசாலை தளபாடங்கள் செய்து வழங்கல் வேலைகளுக்கு ICTAD யில் ஒப்பந்தகாரராக பதிவு செய்துள்ளவர்களை உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு யாழ். கல்வித் திணைக்கள பாடசாலை வேலைகள் பொறியியலாளர் திரு. ஜி. சிவபாலன் கேட்டுள்ளார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேடப்படுகிறார்

கடந்த வைகாசிமாதம் 16ம் திகதி (16-05-1996) முதல்

**S. A.** ஆசீர்வாதம்

என்பவரைக் காணவில்லைஇவரைக்காண்பவர்கள் கீழ்க் காணும் முகவரியில் தகவல் தரவும். இவரது வயது 75.

முகவரி:

ம. ஞானப்பிரகாசம்
72/11 இராசசிங்கம் வீதி,
திருநகர்,
யாழ்ப்பாணம்.

(42024)

## அறிவித்தல்

அமரர் டாக்டர் A. L. ஏபிரகாம் அவர்களின் இறுதிச்சடங்குகள் 31-07-96 புதன்கிழமை பி.ப. 3-30 மணிக்கு கொழும்பில் நடைபெறும்.

அதேதினம் பி. ப. 3-30 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இதில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

திருமதி ஜொய்சி ஏபிரகாம்
(மனைவி)

(42040)

## கண்ணீர் அஞ்சலி

வைத்திய கலாநிதி

**ஏ. எல். ஏபிரகாம் M B B. S**

கண்ணீரே கடலாகிப் போனதிங்கே - நீ
கணத்தினிலே மறைந்ததென்ன மாயமையா!
கடலுழுவோர் தரமுயர்ந்து வாழ்ந்திட நீ
கடினமுடன் நின்றுழைத்தாய் மறந்திலம் யாம்
காலனுனைக் கவர்ந்திடலாம் மண்ணினின்று- உன்
நினைவுகள் தான் மறந்திடுமோ நமைப்பிரிந்து!

அன்னாரது பிரிவால் துயருறும்:

குருநகர் கடற்றொழிலாளர் சங்கங்கள்

(சி/2687)

## மரண அறிவித்தல்கள்

### சூசைப்பிள்ளை யேசுதாசன்

(இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், இல 44 சோமசுந்தரம் லேனில், வசிக்கும் சூசைப்பிள்ளை யேசுதாசன் காலமானார்.

அன்னார் செபரெத்தினத்தின் அன்புக் கணவராவர்.

அன்னாரின் இறுதி நல்லடக்கம் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ப. ம. இராஜசுந்தரம்
(சகலன்)
இல. வங்கி,
சுன்னாகம்.

(42041)

### இராமலிங்கம் சதாசிவம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட இராமலிங்கம் சதாசிவம் அவர்கள், தமது 80 ஆவது வயதில் 29 - 07 - 1996 அதிகாலை இயற்கை எய்தினார்.

இவர் காலஞ்சென்ற திருமதி செல்வநாயகத்தின் அன்புக் கணவரும், இரட்ணசிங்கம் (இளைப்பாறிய கிராம சேவையாளர்), இராசநாயகி, தெய்வநாயகி, ஜெயசிங்கம் (இளைப்பாறிய தொழில் நுட்பவியலாளர்), துவாரகாதேவி, சதாலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகம்மா, நவரத்தினம் (இறைவரித் திணைக்களம்), அருள்நாயகி, ஜெயவீரசிங்கம் (ஆசிரியர்), ஸ்ரீஸ்கந்தராஜா (சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்), காலஞ்சென்ற திருமதி சீதாராணி ஆகியோரின் அன்பு மாமனாரும், சர்மிளா, டயமிளா, தேவிகா, கோகுலன், மகிணன், கேமிளா, யசோகரன், முரளிகரன், பிரபாகரன், உமாகரன், லதா, ஜெயஜீவா, பிரதீபன், கல்யாணி. றமணன், சுஜித்தா, முகுந்தன், சுகன்யா, சுதர்சிகா, சசிகரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 29 - 07 - 96 திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் இருந்து தகனக்கிரியைகளிற்காக கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த. ஸ்ரீஸ்கந்தராஜா
(மருமகன்)

''செல்வபதி''
மீசாலை மேற்கு,
மீசாலை.

(42027)

## நோயாளர் பாதிப்பு

அச்சுவேலி ஜூலை 30

அச்சுவேலியில் சித்த மருத்துவ ஆயுர்வேத இலவச மருந்தகம் செயற்படாமல் இருப்பதால் நோயாளர்கள் பெரும் சிரமப்படுகின்றனர். (இ-11)

## முட்டைக்கு தட்டுப்பாடு

குடா நாட்டில் முட்டை விலை அதிகரித்துள்ளது. முட்டைக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. (இ-173)

### யுத்த ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பொருளாதார நாசம் குறித்து இலங்கைப் பல்கலைக்கழக பொருளியல் பேராசிரியர் சுமணசிறி லியனகே கூறுவதாவது:-

போர் தொடர்வதால் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட பாதுகாப்பு நிதிக்கு மேலாக போர்ச் செலவு ஏற்படுகிறது. இவ்வாறு ஏற்படும் போர்ச் செலவை ஈடுசெய்ய குறித்த சில பொருள்களின் விலையை அதிகரிக்கவும், நிவாரணங்களை மானியங்களை நிறுத்தவும் வேண்டிய நிலை அரசுக்கு உருவாகியுள்ளது.

எல்லாவற்றையும் விட அரசின் திட்டமற்ற பொருளாதாரக் கொள்கையே இந்த நிதிப் பற்றாக் குறைக்கு காரணம் எனக் கூறுவேன்.

திட்டமிடப்படாத பொருளாதாரக் கொள்கை காரணமாக உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. சரியான பொருளாதார முகாமைத்துவம் இன்மையே பொருள்களின் விலை அதிகரிப்புக்கும் காரணமாகும் அரசு இன்று அனுசரித்து வரும் பொருளாதாரக் கொள்கையை மாற்றாவிட்டால் எதிர் காலத்தில் பொருளாதாரப் பேரழிவு நிகழும், போரும் அதற்குப் பெருமளவில் பங்களிக்கும் — என்றார். [அ-10]

### பொதுமக்களின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணம் செய்த எவராவது அந்தரங்கமாக தகவல் எதனையும் தர விரும்பினால், அதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்று தெஹிவளை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஈ. பி. எம். தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

தெஹிவளை ரயில் குண்டு வெடிப்பில் 80 பேர் வரை கொல்லப்பட்டது தெரிந்ததே. (இ-10)

### தெரிவுக்குழு ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையாகக் கொண்டவையாகவே உள்ளன

யுத்தம் தொடங்கியதுக்கான காரணத்தை சரியாக ஆராயாது— அதற்கான பரிகாரங்களைக் காண முற்படாது— ஆயுத பலத்தை அதிகரிப்பது மூலம் மட்டும் யுத்தத்துக்கு முடிவு கட்ட முடியும் என்ற மனோபலத்தாலேயே இன்றைய யுத்தம் ஒரு தொடர்கதையாகி இருக்கிறது.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### கிளிநொச்சிப் ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் இந்தத் தந்திர நடவடிக்கையில் பொதுமக்கள் சிக்கிவிடக்கூடாது.

சர்வதேச ரீதியில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள தமது நிலையை மீண்டும் பலப்படுத்திக் கொள்ளும் முகமாகவே புலிகள் இவ்வாறான தாக்குதல்களை மேற்கொள்கின்றார்கள். இதற்கு முன்பும் இவ்வாறான தொடர்ச்சியான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு ஐ[illegible] [illegible] (உ)

# யுத்தத்துக்கு எதிரான விவசாயப் புரட்சி!

## அமைச்சர் ஐயரட்ண அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 30

யுத்தத்துக்கு எதிரான விவசாயப் புரட்சி ஒன்றை அரசு ஆரம்பித்திருப்பதாக விவசாய காணி, வனவளத்துறை அமைச்சர் டி. எம். ஐயரட்ண அறிவித்திருக்கின்றார்.

நித்தம்புவவில் நடைபெறும் — விவசாய கால் நடை வளர்ப்புத் தொடர்பான — கண்காட்சி ஒன்றை கடந்த சனியன்று ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் அவர் இந்த அறிவிப்பை விடுத்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

யாழ்ப்பாண மக்கள் கடும் உழைப்பாளிகள். பயங்கர யுத்தத்துக்கு மத்தியில் உற்பத்தி முயற்சிகளை மேற்கொண்டு சொந்தக் கால்களில் தலை நிமிர்ந்து வாழவே அவர்கள் விரும்புகின்றனர். அரச மானியங்களை நம்பி வாழ அவர்கள் விரும்பவில்லை. தென் பகுதி மக்கள் அந்த முன் மாதிரியைப் பின்பற்ற வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் விவசாய அபிவிருத்தி முயற்சிகளை மேற்கொள்ள விரிவான திட்டங்களை அரசு முன் வைத்துள்ளது.

பிரதமர் சிறிமாவோவின் ஆட்சிக் காலத்தில் உற்பத்திச் செயற்பாடுகள் அதிகரிக்கப்பட்டதை யாழ். மக்கள் இன்றும் நன்கு நினைவில் வைத்துள்ளனர்.

அதே காலப்பகுதியை மீண்டும் பெற்றுத் தருமாறு அவர்கள் கேட்கின்றனர்.

அவ்வாறான ஒரு நிலை ஏற்பட்டால் நான்கு மாதங்களுக்குள் வெங்காயம், கிழங்கு மற்றும் உற்பத்திப் பொருள்களை கொழும்புக்குத் தாராளமாக அனுப்பி வைக்க முடியும் என்று அந்த மக்கள் தெரிவித்தனர்.

யுத்தத்துக்கு எதிரான விவசாயப் புரட்சி என்ற ஒரு திட்டத்தினை நாம் இன்றிலிருந்து செயற்படுத்தவுள்ளோம். அதன் மூலம் பயிர்ச் செய்கை பண்ணப்படாத நிலங்களை எல்லாம் பயன்படுத்தி விளை நிலங்களை மாற்றியமைக்கவுள்ளோம். இது விடயத்தில் விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக — வங்கிக் கடன் வசதி வழங்குவது உட்பட — பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படவிருக்கின்றன.

— இவ்வாறு அமைச்சர் மேலும் தெரிவித்தார். (உ)

## குரு பூர்ணிமா தினம் இன்று

யாழ்ப்பாணம் ஜூலை30

யாழ்ப்பாணம் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தினரின் குருபூர்ணிமா தினமும் காயத்ரி விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளன.

சேர். பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சேவா நிலைய மண்டபத்தில் இன்று காலை 8. 30 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

இந்த விழாவில் நாவலர் மகாவித்தியாலயம், செங்குந்தா இந்துக்கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி, கனகரத்தினம் மகாவித்தியாலயம், யாழ் இந்துக் கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சியும் —

யாழ். பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி பா. கோபாலகிருஷ்ணனின் சொற்பொழிவும் — விசேட நிகழ்ச்சிகளாக அமையும். (அ)

ஓம்
சரவணபவ



பற்றறுத் தோர் சுற்றமென
பழனியமர் வேலவனை
நற் தென் மராட்சி
வைத்தோம் காப்பு.

சாவகச்சேரி நகர் டச்சு வீதி

அருள்மிகு

## ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலய

# வேல்விழா விஞ்ஞாபனம்

எந்தாயு மெனக்கருள் தந்தையு நீ
சிந்தா குலமானவை தீர்த் தெனையாள
கந்தா கதிர் வேலவனே உமையாள்
மைந்தா - குமரா மறை நாயகனே:

இன்று (30-07-1996) செவ்வாய்க்கிழமை காலை அபிஷேகம், பூஜை ஆகியவற்றைத் தொடர்ந்து காலை 10-00 மணியளவில் ஆலய வீதியில் பழனியமர் வேலவன் வெற்றி வேலுடன் பவனிவந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார்.

பழனி வேலவன் அடியார்கள் வந்து தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

வேல் பவனியைத் தொடர்ந்து நாதஸ்வர இசை நிகழ்வும், இன்னிசை நிகழ்வும் இடம்பெறும்.

குறிப்பு; ★ நாட்டின் சூழ்நிலை கருதி வேல் பவனி ஏற்கனவே அறிவித்தபடி குறிப்பிட்ட பாதையில் நடைபெற மாட்டாது என்பதை அறியத்தருகின்றோம்.

பரிபாலனசபை,
பழனி ஆண்டவர் ஆலயம்.

(சி/2688)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 29[illegible] கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 30-07-1996 [illegible] சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org